# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **கம்பராமாயணம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# கம்பராமாயணம்

- ❖ இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தை தழுவி கம்பர் தமிழில் இயற்றியதே கம்பராமாயணம் ஆகும்.
- ❖ இராமாயணம் ஆதிகாவியம் எனவும் கம்ப நாடகம், கம்பசித்திரம் என்றும் அழைக்கப்படுகிறது
- ❖ வரமிகு கம்பன் சொன்ன வண்ணமந் தொண்ணுற்றாறே என்ற கணக்கீடும் உண்டு
- ❖ பாலகாண்டம், அயோத்திய காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்த காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற ஆறு காண்டங்களை உடையது
- ❖ கம்பராமாயணம் 6 காண்டங்களையும், 118 படலங்கள், 10589 பாடல்களை கொண்டது
- ❖ அயோத்தியா காண்டம் 13 படலங்களை கொண்டது
- ❖ கம்பராமாயணத்தின் பாடல் வகை அறுசீர் கலிநெடிலடி ஆசிரியவிருத்தம்
- ❖ அயோத்தியா காண்டத்தில் குகப்படலம் 7 ஆம் படலமாகும், இதனை கங்கை படலம் எனவும் கூறுவர்
- ❖ ஒட்டக்கூத்தர் உத்தர காண்டத்தை இயற்றினார். இது கம்பராமாயணத்தின் 7வது காண்டமாகும்
- ❖ சுந்தர காண்டம் இராமாயணத்தின் முடிமணியாக திகழ்கிறது
- ❖ பெரும் பிரிவு - காண்டம், உட்பிரிவு - படலம்

## கம்பர்

| | |
|---|---|
| இயற்பெயர் | - கம்பர் (கம்பர் என்பது நரசிங்கத்தை குறிக்கும்) |
| ஊர் | - தேரழுந்தூர் (மயிலாடுதுறை அண்மையில் உள்ளது) நாகை மாவட்டம் (அ) திருவழுந்தூரில் |
| பெற்றோர் | - ஆதித்தன் |
| மரபு | - உவச்சர் |
| காலம் | - 12 ஆம் நூற்றாண்டு |
| இயற்றிய நூல்கள் | - கம்பராமாயணம், சடகோபரந்தரதி (நம்மாழ்வார் பற்றியது), ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம், சிலையெழுபது |
| சிறப்பு பெயர்கள் | - கவிசக்கரவர்த்தி, கல்வியில் பெரியவன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன், கவிபேரரசர், கம்பநாடன், கம்ப நாட்டாழ்வான் |
| சிறப்புகள் | - புகழேந்தி புலவர், ஜெயங்கொண்டார், ஒட்டக்கூத்தர் இவர் சமகாலத்தவர். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் கம்பர் வாழ்ந்தார் |
| ஆதரித்தவர் | - திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல். இவரை பற்றி இராமாயணத்தில் 1000 பாடல்களுக்கு ஒரு பாடல் வீதம் பத்து கவிகளில் பாடியுள்ளார் |

- இராமாயணத்திற்கு கம்பர் இட்டபெயர் இராமாவதாரம். இது கம்பநாடகம், கம்பசித்திரம் எனவும் கூறப்படுகிறது.
- திருவெண்ணெய் நல்லூர், திருவொற்றியூர் போன்ற இடங்களில் இராமாயணத்தை பாடி, பின்பு திருவரங்கத்தில் அரங்கேற்றினார்.
- விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன் எனக் கூறியவர் - திருத்தக்கத்தேவர்
- இராமாயணத்தில் இரணியன் வதைப் படலம், மாயாசனகப் படலமும் சிறந்தது
- கம்பராமாயணம் 6 காண்டங்களை உடையது. இதன் உட்பிரிவு படலம் ஆகும்
- தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பினால் உச்சநிலையை அடைந்தது
- கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்கு உரிய இலக்கணங்களை முழுமையாக பெற்றது
- தொல்காப்பிய நெறி நின்றவர் கம்பர். வடமொழிகளை நீக்கி தமிழ்படுத்தியவர்
- வால்மீகி - ஆதிகவி சிறப்பு பெயர், இராமாயணம் - ஆதிகாவியம்
- யாமறிந்த புலவரிலே கம்பனை போல் வள்ளுவனை போல் இளங்கோவை போல் என்று பாரதியார் கம்பரை பாராட்டியுள்ளார்
- அயோத்தியின் மன்னன் தசரதனுக்கு மக்கள் நால்வர் - ராமன், பரதன், இலக்குவன், சத்ருகனன்
- கைகேயின் மனதை கெடுத்தவள் மந்தரை
- தசரதன் மனைவிகள் - கோசலை, கைகேயி, சுமத்திரை. கோசலை (அ) கௌசல்யா
- கோசலை - இராமன், கைகேயி - பரதன், சுமத்திரை - இலக்குவன், சத்ருகனன்
- கோசலை - இராமன், கைகேயிக்கு - பரதன், சுமத்திரை - லட்சுமணன், சத்ருகனன்
- கைகேயின் வேலையாள் - கூனி
- திரிசடை - அசோகவனத்தில் காவல் காத்த அரக்கி
- இந்திரஜித் - இராவணனின் மகன் இவனின் மற்றொரு பெயர் மேகநாதன்
- சூர்பனகை - இராவணனின் தங்கை
- தாடகை - சுக்ரிவனின் மனைவி
- விபிசனன் - இராவணனின் தம்பி
- கும்பகர்ணன் - இராவணனின் தம்பி
- மண்டோதரி - இராவணனின் மனைவி
- குகன் காங்கையாற்றுத் தோணிதுறைக்கும், 1000 படகுகளுக்கும் தலைவன்
- குகன் சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழும் தலைவன்

**குகனை பற்றிய கருத்துக்கள்**

போர்க்குணம் உடையவன், துடியெனும் பறைகளை உடையவன் பகைவரை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன், மலை போன்ற திரண்ட தோள்களை உடையவன், தோல் செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன், இருள் போன்ற கரிய நிறத்தை உடையவன், கரிய மேகக்கூட்டம் திரண்டு வந்தது போல மிகுந்த படை பலம் உடையவன், முனிவரின் தவச்சாலையில் தங்கியிருந்த இராமனை காண தேனும், மீனும் கொண்டு சென்றவன், தாயினும் சிறந்த அன்பினன் என்று இலக்குவனால் சொல்லப்பட்டவன் குகன்.

- நெடியவன்- உயர்ந்தவனாகிய இராமன்
- அன்னவன் - குகன்
- பண்ணவன் - நற்குணங்கள் உடைய இலக்குவன்
- இராமன் கோதண்டம் என்னும் வில்லேந்தியவன்
- அனுமன் சிறிய திருவடி என்றும், சுந்தரன் என்றும் அழைக்கப்படுகிறார்
- இராமன் அனுமனிடம் கணையாழியையும், சீதை அனுமனிடம் சூடாமணியையும் வழங்கினர்
- திருவடி தொழுதபடலம் உள்ள காண்டம் சுந்தர காண்டம்
- திருவடி தொழுதபடலம் என்பது அனுமனுடைய கூற்று
- எல்லாவற்றிலும் இனிய நண்பனே இவ்விடத்தில் என்னுடன் இருப்பாயாக என்று குகனை நோக்கி இராமன் கூறியது
- உத்திரபிரதேசத்தில் பாயும் நதி சரயு
- பிறை நிலவு போல் நெற்றி உடையவள் சீதை
- தாமரை போன்ற கண்களை உடையவன் இராமன்
- இராமன் பிரிவால் அனலிலிட்ட மெழுகுபோல் துன்பமடைந்தவர்கள் அந்தணர்கள்
- கற்போருக்கு இனிமை தரும் கவிச்சுவை நிறைந்தது. பொருள், அணி, நடையால் சிறந்த நூல் கம்பராமயணம்
- திருக்குறளும், கம்பராமயணமும் தமிழுக்கு கதி என்பர் பெரியோர்கள்
- உலகில் நாகரிகம் முற்றிலும் அழிந்து விட்டாலும் திருக்குறளும், இராமாயணமும் இருந்தால் போதும் அதனை மீண்டும் புதுப்பித்துவிடலாம் - கால்டுவெல்

**மேற்கோள்:**

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரணங்களே" **- கம்பராமாயணம்**

ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாய கன்போர்க் குகன்எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல்திரள் தோளினான் **குகன் வருகை - கம்பராமாயணம்**

"விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மட அன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்" **- கம்பராமாயணம்**

"துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா
அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" **- கம்பராமாயணம்**

“ஒன்றே யென்னின் ஒன்றே யாம்,
பலவென் றுரைக்கிற் பலவேயாம்” **- கம்பராமாயணம் (யுத்தகாண்டம்)**

“தாதுகு சோலை தோறும் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்” **- கம்பராமாயணம்**

“கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்” **- கம்பராமாயணம்**

“விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்” **- கம்பராமாயணம்**

“மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும் கை
ஆழிதரித்தே அருளும்கை - சூல்வினையை” **- கம்பர் (உழவின் சிறப்பு)**

“உலகம் உவப்ப” – திருமுருகாற்றுபடை **- நக்கீரர்**
“உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்” **- பெரியபுராணம் - சேக்கிழார்**